**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**M.C.O.P. 129/2022**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | : | **RW.1** |
|---|---|---|
| Name | : | சீனிவாசன் |
| Father's / Husband Name | : | அருணாச்சலம் |
| Village / முகவரி | : | உதவியாளர் மோட்டார் போக்குவரத்து அலுவலகம் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 44 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 06 th November 2025

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கு சம்பந்தமாக சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது அந்த அழைப்பாணையின் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சி சொல்ல எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். வட்டார போக்குவரத்து அலுவலர் என்னை சாட்சியம் அளிக்க பணிக்கப்பட்ட கடிதத்தை தாக்கல் செய்கிறேன். அந்த கடிதம் ***எ.ம.சா.ஆ.1*** ஆகும். மனுதாரர் ஓட்டிய வாகனம் பதிவு எண்.TN 40 A 2601 என்ற வாகனத்தை எங்களது அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு விபத்தாய்வு அறிக்கை வழங்கியுள்ளார். அதற்கான ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறேன். அந்த ஆய்வறிக்கை ***எ.ம.சா.ஆ.2*** ஆகும். மனுதாரர் ஓட்டுனர்உரிமம் இல்லாமல் அவருயைட வாகனத்தை ஓட்டியதால் அவருக்கு தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டது. அந்த தணிக்கை அறிக்கை எ.ம.சா. ஆ. 3 ஆகும். மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் 1 ஆம் எதிர்மனுதாரர் ஓட்டிய

வாகனத்தை ஆய்வு செய்தபோது அந்த வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என செலான் வழங்கியுள்ளார். அது குறித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆய்வறிக்கை எ.***ம.சா.ஆ.4*** எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்ட செலான் ***எ.ம.சா.ஆ.5.*** செலான் வழங்கப்பட்டதன் பேரில் அபராத தொகை ரூ.1000/- ஐ 2 ஆம் எதிர்மனுதார் செலுத்தியுள்ளார். அதற்கான இரசீது எ.***ம.சா.ஆ.6.*** எனவே, 1 ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் ஓட்டியதால் மோட்டார் வாகன சட்டத்தை மீறியுள்ளதால் அது மோட்டார் வாகன சட்டப்படி தவறு.

**குறுக்கு விசாரணை**

வாகனங்களை நான் ஆய்வு செய்யவில்லை. ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சி சொல்கிறேன். வேறு எதாவது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் வாங்கியிருந்தால் அதை எங்களால் மறுக்க முடியாது என்றால் சரிதான் .

**மறுவிசாரணை**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.07 13:19:54 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.